# 2

# களவியல்

பழந்தமிழரின் அகவாழ்க்கையில் களவு இல்லாமல் கற்பு வாழ்க்கை அமைவதில்லை. முற்பிறவியில் தலைவன் தலைவியாக இருந்தவர்கள் இப்பிறப்பிலும் ஒன்றிணைவர் என்பது நம்பிக்கை.

அகத்திணையியலில் அகவாழ்விற்கு அடிப்படையான முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பவை விளக்கப்பட்டன. கருப்பொருளில் முக்கியமாக அகத்திணை மாந்தர்கள், அவர்களின் செயற்பாடுகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

களவியலில் தலைவன் தலைவி சந்திப்பு, சந்திக்கும் முறைகள், தோழியாகிய பாங்கி, பாங்கனின் பங்கு, இணையும் தலைவன் - தலைவியின் மனநிலை, வாயில், குறி என அவர்களின் களவொழுக்கத்தோடு தொடர்புடைய அனைத்துச் செய்திகளும் விளக்கப்பட்டுள்ளன.

**களவின் இலக்கணம்**

117 **உளமலி காதல் களவெனப் படுவது**
**ஒருநான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்**
**யாழோர் கூட்டத்து இயல்பினது என்ப.**

மனம் மகிழ்ந்து நெகிழ்வதற்குக் காரணமான களவு மணம் நான்கு வேதங்களில் சொல்லப்படும் எட்டு வகை மணங்களுள் யாழோடு இயங்கும் வானவர்களாகிய கந்தருவரின் முறையாகிய காந்தருவ மணத்தோடு ஒப்பிடத் தக்கது.

**களவு மணம் = காந்தருவ மணம்**

**நான்கு வேதம்**

**1.ரிக் (rk)**
**2. யசுர் (*yacur*)**
**3. சாமணம் (sa:man)**
**4. அதர்வணம் (*atharvana*)**

**வேதங்கள் கூறும் மணமுறை எட்டு**

1. **பிரமம் (*brahman*)**
2. **பிரசாபத்தியம் (*praja:patya*)**
3. **ஆரிடம் (*a:rsa*)**
4. **தெய்வம் (*daiva*)**
5. **காந்தருவம் (*ga:ndharva*)**
6. **அசுரம் (*asura*)**
7. **இராக்கதம் (*ra:ksasa*)**
8. **பைசாசம் (*paisaca*)**

1. பிரமம் : ஒத்த குலத்தில் (கோத்திரம்) உள்ளவன், நாற்பத்தெட்டு ஆண்டு வயதுள்ள பிரமசரியனுக்குப் பன்னிரண்டு வயதுள்ள பெண்ணை பூப்பு அடைந்த பின் இரண்டாம் பூப்பு அடைவதற்கு முன் அணிகலன் அணிவித்துத் தானமாகக் கொடுப்பது.

2. பிராசாபத்தியம்: மகளைக் கொடுப்பதற்குரிய குலமாகப் பார்த்து மாப்பிள்ளை வீட்டார் கொடுக்கும் பரிசு அளவை இரட்டிப்பாகக் கொடுத்துப் பெண்ணைக் கொடுப்பது.

3. ஆரிடம் : ஒன்றாயினும் இரண்டாயினும் ஆவும் காளையும் வாங்கிக் கொண்டு கன்னியை அலங்கரித்துத் தீயைச் சாட்சியாக வைத்துக் கொடுப்பது.

4. தெய்வம் : பெருவேள்வி செய்கின்ற மரபைச் சார்ந்த பல ஆசிரியர்களுக்குக் கன்னியை அவ்வேள்வித் தீக்கு முன்னர் தட்சணையாகக் கொடுப்பது.

5. காந்தருவம் : கொடுப்பாரும் கேட்பாருமின்றித் தலைமகனும் தலைமகளும் தனியோர் இடத்து எதிர்ப்பட்டுத் தாமே கூடுவது.

6. ஆசுரம் : தலைமகளுக்கு அணிகலன்கள் பூட்டி, சுற்றத்தாருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்துக் கொள்வது.

7. இராக்கதம்: தலைமகளின் ஒப்புதல் இல்லாமலும் தமரின் ஒப்புதல் இல்லாமலும் வலிந்து அவளைக் கொண்டு செல்வது.

8. பைசாசம்: துயில்வோரிடமும் கள்ளுண்டு களித்து மயங்கியோரிடமும் சேர்வது.

தமிழ் மரபும் வடமொழி மரபும் பின்வருமாறு அக இலக்கண நூலாரால் ஒப்பிடப்படுகின்றன.

| தமிழ் | கைக்கிளை (1) | ஐந்திணை (2-6) | பெருந்திணை (7) |
|---|---|---|---|
| வடமொழி | 1. ஆசுரம்<br>2. இராக்கதம்<br>3. பைசாசம் | 4. காந்தருவம் | 5. பிரமம்<br>6. பிரசாபத்தியம்<br>7. ஆரிடம்<br>8. தெய்வம் |

இதனைத் தொல்காப்பியர்,

**முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே**

**பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே**

என்பார்.

(தொல்.பொருள்.102.10

தமிழகத்தின் ஐவகை நிலங்களில் இன்பம், பொருள், அற என்பவற்றோடு ஒன்றுபடும் களவு, கற்பு வாழ்வில் களவு மணம் காந்தரு

4. குறிப்பறிதல்
தன்னைக் கண்டதால் தலைவி உள்ளத்தில் எழுந்த
வேட்கையை அவனுடைய கண்களைக் கொண்டே தலை
தெரிந்து கொள்ளுதல்

(அக.வினை.1

122. அரிவை நாட்டம் அகத்துநிகழ் வேட்கை
தெரிய உணர்த்துங் குரிசிற்கு என்ப.

தலைவியின் உள்ளத்தில் தோன்றும் விருப்பங்களை அவளுடைய கண்களே தலைவனுக்கு உணர்த்திவிடும். கண்கள் குறிப்பறிவித்தலை தொல்காப்பியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை யாகும்

(தொல்.பொருள்.9

இராமன், சீதை இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு குறிப்பறிந்து நோக்கிக் கொண்டதைப் பின்வரும் கம்பராமாயணப் பாடலால் அறியலாம்.

எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்

(கம்ப.59

## களவிற்கு உரிய கிளவித் தொகை

இயற்கைப் புணர்ச்சி முதலாக வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினேழும் களவு என்னும் கைகோளிற்குரிய கிளவிகள் ஆகும். இவற்றில் ஒவ்வொன்றும் சில உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. களவியல் தொடர்பான இலக்கணம் இப்பதினேழு பாகுபாட்டுடன் முடிவடைகிறது.

123. இயற்கைப் புணர்ச்சி வன்புறை தெளிவே
பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்கல்
இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்
பாங்கிமதி உடன்பாடு பாங்கியிற் கூட்டம்
பாங்கமை பகற்குறி பகற்குறி இடையீடு
இரவுக் குறியே இரவுக்குறி இடையீடு
வரைவு வேட்கை வரைவு கடாதல்
ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயின் பிரிதலென்று ஒருபதின் ஏழும்
களவிற்கு உரிய கிளவித் தொகையே.

இந்நூற்பாவில் கூறப்படும் பதினேழும் களவிற்கு உரிய கிளவிகள் ஆகும்.

1. இயற்கைப் புணர்ச்சி
2. வன்புறை
3. தெளிவு
4. பிரிவுழி மகிழ்ச்சி
5. பிரிவுழிக் கலங்கல்
6. இடந்தலைப் பாடு
7. பாங்கியிற் கூட்டம்
8. பாங்கி மதி உடன்பாடு
9. பாங்கியற் கூட்டம்
10. பாங்கமை பகற்குறி
11. பகற்குறி இடையீடு
12. இரவுக் குறி
13. இரவுக்குறி இடையீடு
14. வரைவு வேட்கை
15. வரைவு கடாதல்
16. ஒருவழித் தணத்தல்
17. வரைவிடைவைத்துப் பொருள்வயின் பிரிவு

களவியல் கருத்துகள் அனைத்தும் இந்த பதினேழு பெரும் பிரிவில் அடங்கிவிடும்.

## 1. இயற்கைப் புணர்ச்சி

**முயற்சி இன்றி முடியும் தெய்வத்தான் இயன்ற இயற்கைப் புணர்ச்சி எனவும் தலைவனது முயற்சியான் முடியும் இயற்கைப் புணர்ச்சி எனவும் இயற்கைப் புணர்ச்சி இருவகைத்து.**

**(அக.விள.32.உரை)**

இயற்கைப் புணர்ச்சியை 124 முதல் 127 வரை உள்ள நூற்பாக்கள் விளக்குகின்றன.

**இயற்கைப் புணர்ச்சியின் தன்மை** (7)

124 **தெய்வம் புணர்ப்பச் சிந்தைவேறு ஆகி**
**எய்தும் கிழத்தியை இறையோன் என்ப.**

தன்மனம் எண்ணிப் பார்க்காத அல்லது மாறுபட்ட கருத்துக்கொண்ட தலைவன், தெய்வக் கூட்டத்தால் ஒரு தலைவியுடன் இணைவது இயற்கைப் புணர்ச்சியின் தன்மையாகும்.

(8)

**உயிர்ஒன்றி ஒருகாலைக்கு ஒருகால் அன்பு முதலியன சிறத்தற்கு ஏதுவாகிய பால்வரை தெய்வத்தின் ஆணை**

என நச்சினார்க்கினியர் குறிப்பிடுவார்.

**தெய்வத்தின் எய்தும் புணர்ச்சியின் விரி**

125. **கலந்துழி மகிழ்தலும் நலம் பாராட்டலும்**
**ஏற்புற அணிதலும் என்னும்இம் மூன்றும்**
**போற்றிய தெய்வப் புணர்ச்சியின் விரியே.**

**20. பாங்கி ஆற்றுவித்து அகற்றல்**

பாங்கி தலைவனுக்கு ஆறுதல் கூறி மறுநாள் வருமாறு அனுப்புதல்.

தலைவ! யான் தலைவியை அணுகி, அவள் உள்ளக் கருத்... அறிந்து, அவளுக்கு நீ கொடுக்கும் கையுறையை ஏற்க வேண்டும் என... மனம் இருந்தால் பின்னர் வந்து இக்கையுறையைப் பெற்றுக் கொள்கிறே... (கஞ். கோ.93) என்று தோழி கூறி அவனை விடுத்தல்.

## 2. மடல் கூற்று (3) மடல் விலக்கு (4)

145. இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன்
மடலே பொருளென மதித்தலும் பாங்கிக்கு
உலகின் மேல்வைத்து உரைத்தலும் அதனைத்
தன்மேல் வைத்துச் சாற்றலும் பாங்கி
தலைமகள் அவயத்து அருமை சாற்றலும்
தலைமகன் தன்னைத் தானே புகழ்தலும்
அலர்முலைப் பாங்கி அருளியல் கிளத்தலும்
கொண்டுநிலை கூறலும் என்றிவை ஏழும்
மடற் கூற்றிற்கும் மடல் விலக்கிற்கும்
கடவ என்மனார் கற்றறிந் தோரே.

இவை ஏழும் மடல் கூற்றுக்கும் மடல் விலக்குக்கும் விரியா... அமையும்.

**1. இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன் மடலே பொருளெ... மதித்தல்**

முதல் வாயிலாகிய பாங்கியின் வழியில் தன் குறையைக் களைந்... கொள்ள முற்பட்ட தலைவனுக்கு அது முடியாமல் போகவே வே... வழியில் தலைவியை அடைய நினைக்கிறான். தான் காதலித்தவ... அடையத் தடை ஏற்பட்டால் அதை நீக்க மடல் ஏறித் தலைவியை... பெறுவர்.

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல் அல்லது இல்லை வலி
(திருக்.113...)

மடலேறுதல்

உன் தலைவியின் ஓவியத்தையும் என் ஓவியத்தையும் ஓ... ...யில் எழுதிக் கைக்கொண்டு, பனங்கருக்கால் செய்யப்பட்ட குதி... மீதேறி உங்கள் ஊர்த் தெருவில் காட்சியளிப்... எனத் தலைவன் பா...

**2. பாங்கிக்கு உலகின்மேல் வைத்து உரைத்தல்**

தலைவன், தலைவியின் காதலுக்கு எதிர்ப்பு ஏற்படும் போது அதனை எதிர்கொள்ளத் தலைவன் மடலேறுதல் உலக வழக்கு எனப் பாங்கியிடம் உரைத்தல்.

> **மாவென மடலும் ஊர்ப பூவெனக்**
> **குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப**
> **மறுகின் ஆர்க்கவும் படுப**
> **பிறிதும் ஆகுப காமம்காழ்க் கொளினே**
>
> (குறுந்.17)

விரும்பியவளை அடையத் தடை ஏற்பட்டால் அவளை அடைய மனம் துடிக்கும். கருக்கு மட்டையால் செய்யப்பட்ட குதிரையில் ஏறுவர்; எருக்கம் பூ மாலை சூடுவர்; தெருவில் ஆர்ப்பரிப்பர். தலைவியை அடைய எல்லா வழிகளையும் மேற்கொள்வர்.

**3. தன்மேல் வைத்துச் சாற்றல்**

தலைவியை அடையத் தடை ஏற்பட்டால் உலகியல்பாகிய மடலேறுதலைத் தானும் செய்யப் போவதாகப் பாங்கியிடம் கூறுதல்.

> **மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற**
> **படல் ஒல்லா பேதைக்குஎன் கண்**
>
> (திருக்.1136)

மடல் ஊர்தலை நள்ளிரவிலும் நினைத்துக் கொள்கிறேன்; ஏனெனில் என் கண்கள் இரவிலும் மூடுவதில்லை.

**4. பாங்கி தலைமகள் அவயத்து அருமை சாற்றல்**

தலைவனே! படைப்புக் கடவுளாகிய பிரமன் படைத்த ஆயுதமே தலைவியின் விழிகள். பொற்பாவை போன்ற தலைவியை உன்னால் படமாகத் தீட்ட முடியாது. அவளின் இடை எது என அறிய முடியாது; இல்லாத ஒன்றை உன் எழுத்தாணி எவ்வாறு எழுதும்.

> **இடையேது எனத் தெரியாது உரை ஆணி இட அரிதே**
>
> (தஞ்.கோ.104)

**5. தலைமகன் தன்னைத் தானே புகழ்தல்**

தன்னால் தலைவியின் உருவத்தை எழுத முடியும் எனப் பாங்கிக்குக் கூறுதல்.

**தோழியே! தாமரை மலரில் வீற்றிருந்து நான்கு திசைகளுக்கும் வேதத்தை அருளும் பிரமன் திருமாலின் மகன். நானோர் பிரமன் மகன் என்னால் உன் தலைவியின் ஓவியத்தை எழுத முடியும்.**

(தஞ்.கோ.95)

**6. பாங்கி அருளியல் கிளத்தல்**

பாங்கி தலைவனின் அருளுடைமையைப் போற்றிக் கூறுதல்.

மடலேறுங்கால் பனை மட்டைகளை நீர் வெட்டும்போது அங்குக் கூடுகட்டி இருக்கும் பறவைகளுக்கு மிக்க துன்பம் நேரும். நும்முடைய

**2. பாங்கிக்கு உலகின்மேல் வைத்து உரைத்தல்**

தலைவன், தலைவியின் காதலுக்கு எதிர்ப்பு ஏற்படும் போது அதனை எதிர்கொள்ளத் தலைவன் மடலேறுதல் உலக வழக்கு எனப் பாங்கியிடம் உரைத்தல்.

**மாவென மடலும் ஊர்ப பூவெனக்**
**குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப**
**மறுகின் ஆர்க்கவும் படுப**
**பிறிதும் ஆகுப காமம்காழ்க் கொளினே** **(குறுந்.17)**

விரும்பியவளை அடையத் தடை ஏற்பட்டால் அவளை அடைய மனம் துடிக்கும். கருக்கு மட்டையால் செய்யப்பட்ட குதிரையில் ஏறுவர்; எருக்கம் பூ மாலை சூடுவர்; தெருவில் ஆர்ப்பரிப்பர். தலைவியை அடைய எல்லா வழிகளையும் மேற்கொள்வர்.

**3. தன்மேல் வைத்துச் சாற்றல்**

தலைவியை அடையத் தடை ஏற்பட்டால் உலகியல்பாகிய மடலேறுதலைத் தானும் செய்யப் போவதாகப் பாங்கியிடம் கூறுதல்,

**மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற**
**படல் ஒல்லா பேதைக்குஎன் கண்** **(திருக்.1136)**

மடல் ஊர்தலை நள்ளிரவிலும் நினைத்துக் கொள்கிறேன்; ஏனெனில் என் கண்கள் இரவிலும் மூடுவதில்லை.

**4. பாங்கி தலைமகள் அவயத்து அறுமை சாற்றல்**

தலைவனே! படைப்புக் கடவுளாகிய பிரமன் படைத்த ஆயுதமே தலைவியின் விழிகள். பொற்பாவை போன்ற தலைவியை உன்னால் படமாகத் தீட்ட முடியாது. அவளின் இடை எது என அறிய முடியாது; இல்லாத ஒன்றை உன் எழுத்தாணி எவ்வாறு எழுதும்.

**இடையேது எனத் தெரியாது உரை ஆணி இட அரிதே**

**(தஞ்.கோ.104)**

**5. தலைமகன் தன்னைத் தானே புகழ்தல்**

தன்னால் தலைவியின் உருவத்தை எழுத முடியும் எனப் பாங்கிக்குக் கூறுதல்.

**தோழியே! தாமரை மலரில் வீற்றிருந்து நான்கு திசைகளுக்கும் வேதத்தை அருளும் பிரமன் திருமாலின் மகன். நானோ் பிரமன் மகன் என்னால் உன் தலைவியின் ஓவியத்தை எழுத முடியும்.**

**(தஞ்.கோ.95)**

**6. பாங்கி அருளியல் கிளத்தல்**

பாங்கி தலைவனின் அருளுடைமையைப் போற்றிக் கூறுதல்.

மடலேறுங்கால் பனை மட்டைகளை நீர் வெட்டும்போது அங்குக் கூடுகட்டி இருக்கும் பறவைகளுக்கு மிக்க துன்பம் நேரும். நும்முடைய

## 6. கூட்டல் (9) கூடல் (10) ஆயம்கூட்டல் (11) வேட்டல் (12)

149. இறைவி கையுறை ஏற்றமை பாங்கி
இறைவற்கு உணர்த்தலும் குறியிடம் கூறலும்
குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறலும்
குறியிடத்து உய்த்து நீங்கலும் இறையோன்
இடத்தெதிர்ப் படலும் இயைதலும் புகழ்தலும்
விடுத்தலும் பாங்கி மெல்லியல் சார்ந்து
கையுறை காட்டலும் மையுறை கண்ணியைப்
பாங்கிற் கூட்டலும் நீங்கித் தலைவற்கு
ஓம்படை சாற்றலும் உலகியல் மேம்பட
விருந்து விலக்கலும் பெருந்தகை விருந்திறை
விரும்பலும் என்னத் தெரிந்தபன் மூன்றும்
கூட்டல் முதலா வேட்டல் ஈறாப்
பாங்கிக்கு வகுத்த நான்கிற்கும் உரிய.

### 1. இறைவி கையுறை ஏற்றமை பாங்கி இறைவர்க்கு உணர்த்தல்

அளித்த கையுறையைத் தலைவி பெற்றுக் கொண்டதைப் பாங்கி தலைவனுக்குக் கூறுதல்.

நீ அளித்த கையுறையைத் தலைவி **நீயாக அல்லது மாந்தழையாக நினைந்திலளே** (தஞ்.கோ.129) எனப் பாங்கி குறிப்பிடுகின்றாள்.

### 2. பாங்கி தலைமகற்குக் குறியிடம் கூறல்

தலைவி கையுறை ஏற்று ஒப்புதல் அளித்த பின்னர்ப் பாங்கி தலைவனுக்குச் சந்திக்கும் இடத்தைக் கூறுதல்.

**. . . . .தடம்புலாம்**
**தாழைமா ஞாழல் ததைந்து உயர்ந்த தாழ்பொழில்**
**ஏழை மான்நோக்கி இடம்** **(திணைமாலை.44)**

தாழையும் ஞாழலும் வளர்ந்து செழித்துள்ள சோலையே தலைவி இருக்கும் இடமாகும்.

### 3. பாங்கி குறியிடத்து இறைவிலக் கொண்டு சேறல்

தலைவனுக்குக் குறியிடம் கூறியபிறகு பாங்கி தலைவியை உரிய இடத்தில் கொண்டு போய்ச்சேர்த்தல்.

**பூமாதவிப் பந்தர்வாய் விளையாடுவதும் போதுகவே** (தஞ்.கோ.131) எனக்கூறிப் பாங்கி தலைமகளை விளையாட அழைத்துப் போகிறாள்.

### 4. பாங்கி தலைமகளைக் குறியிடத்து உய்த்து நீங்கல்

இருவரும் இருக்க வேண்டிய இடத்தை விட்டுப் பாங்கி வேறு இடத்திற்கு வருதல்.

**செங்களம் படக் கொன்று அவுணர் தேய்த்த**
**செங்கோல் அம்பின் செங்கோட்டு யானைக்**
**கழல் தொடிச் சேஎய் குன்றம்**
**குருதிப் பூவின் குலைக் காந்தட்டே.**

அசுரை அழித்த சிவந்த வேலினையுடை முருகனு... யானையும் செந்நிறக் காந்தள் மலரும் உள்ள இடம்

**5. இறைவி இறையோன் இடத்து எதிர்ப்படுதல்**

பாங்கி குறிப்பிட்ட இடத்தில் தலைவி இருக்க, தலைவன் முன்வருதல்.

என்னுடைய மனக் குறையைப் போக்க வேண்டும் எனத்... இங்கே வந்திருக்கிறாள் (தஞ்.கோ.133)

**6. புணர்ச்சியின் மகிழ்தல்**

தலைவன் தலையோடு மகிழ்ந்து இன்பம் அடைதல்.

**கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்டொடி கண்ணே உள** (திரு...

ஐம்பொறிகளுக்கும் உரிய ஐம்புல இன்பங்களையும் இ... மட்டுமே தரமுடியும்.

**7. நலம் பாராட்டல்**

இயற்கைப் புணர்ச்சியில் தலைவன் தலைவியைக் கூடி... அவளுடைய எழில் நலத்தைப் பாராட்டிப் புகழ்தல்.

**பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி**
**வாலெயிறு ஊறிய நீர்** (திருக்...

**8. தலைமகளைத் தலைமகன் விடுத்தல்**

இருவரும் கூடி மகிழ்ந்த பிறகு தலைவன் தலைமகளைப் பாங்... கூட்டத்தில் விடுத்தல். **ஆயம் புகல அடைந்தருள் நீ** (தஞ்.கோ.136)

**9. பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டல்**

இருவரும் கூடியிருக்கும்போது பாங்கி பிரிந்தபிறகு தலைவ... தழை மலரைக் கையுறையாகக் கொடுத்தல்.

**நின்கைபோல் கவின்கொள் செங்காந்தண் அம்போது**... (தஞ்.கோ.137)

**10. பாங்கி தலைவியைப் பாங்கிற் கூட்டல்**

பாங்கி தலைவியைப் பாங்கியர் கூட்டத்திற்கு அழைத்துப் பே... **இனிநாம் அகன்று இளையார் விளையாடிடம் எய்துமே** (தஞ்.கோ...

**11. பாங்கி தலைவியை நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றல்**

பாங்கி தலைவியைப் பாங்கியர் கூட்டத்தில் சேர்த்தபிறகு மீண்டும் தலைவனிடம் வந்து இருவரின் சந்திப்புக்குப் பாதுகாப்புத் தர உறுதி கூறல்.

**அவரை பொருந்திய பைங்குரல் ஏனல்**
**கவரிமா கதூஉம் படர்சாரல்**
**கானக நாட! மறவல் வயங்கிழைக்கு**
**யானிடை நின்ற புணை**

**(ஐந். எழு. 1)**

இனி உங்கள் இருவருக்கும் புணையாக (தெப்பம்) இருப்பேன்.

**12. பாங்கி தலைமகனை உலகியல் மேம்பட விருந்து விலக்கல்**

உலக வழக்கம் சிறக்கப் பாங்கி தலைவனை விருந்துக்கு அழைத்து, அவன் அப்போதே தன் ஊருக்குச் செல்வதை விலக்குதல்.

தலைவ! அருவி முழங்கும் எம் சீறூரில் இன்று எம்மாட்டிருந்து மதுவும் கிழங்கும் உண்டு, குறவர் ஆடும் கூத்தினை இரவில் கண்டு பின் வைகறையில் நின் ஊருக்குச் செல்வாயாக (திருக்கோவை.127)

**13. தலைமகன் விருந்திறை விரும்பல்**

பாங்கியின் வேண்டுகோளுக்கு இணங்கிய தலைவன் விருந்தினனாகத் தங்க விரும்புதல்.

மயிலனையீர்! நும் கையால் தொடப்பட்ட பொருள் எதுவாயினும் அது எனக்கு அமுதமாகும். கதிரவன் மறையும் இந்நேரத்தில் இப்பொழில் தங்குதற்கு இனிதாக உள்ளது. உங்கள் மனையும் கானவர் காவலோ தேவர் காவலோ உடைய தன்று (அம்பிகா.163)

**பாங்கியிற் கூட்டத்து விரி இவை** (33)

150. **அற்றமில் சிறப்பின் இவ்வறுபத்து ஒன்றும்**
**குற்றமில் பாங்கியிற் கூட்டத்து விரியே.**

| | | |
|---|---|---|
| | **பாங்கியிற் கூட்டத்து விரி** | |
| **144** | **இரந்து பின் நிற்றல், சேட்படை** | **20** |
| **145** | **மடற்கூற்று, மடல் விலக்கல்** | **7** |
| **146** | **குறை நேர்தல், மடற்கூற்று ஒழிதல்** | **9** |
| **147** | **குறை நயப்பித்தல், மறுத்தல்** | **6** |
| **148** | **குறை நயப்பித்தல், நயப்பித்தல்** | **6** |
| **149** | **கூட்டல், கூடல், ஆயங்கூட்டல், வேட்டல்** | **13** |
| | | **61** |

(34)

## அல்லகுறியின் வகை

160. இறைவிக்கு இகுளை இறைவரவு உணர்த்துழித்
தான்குறி மருண்டமை தலைவிஅவட்கு உணர்த்தலும்
பாங்கி தலைவன் தீங்குஎடுத்து இயம்பலும்
புலந்துஅவன் போதலும் புலர்ந்தபின் வறுங்களம்
தலைவிகண்டு இரங்கலும் தன்துணைக்கு உரைத்தலும்
தலைமகள் அவலம் பாங்கி தணித்தலும்
இறைவன்மேல் பாங்கி குறிபிழைப்பு ஏற்றலும்
இறைவிமேல் இறைவன் குறிபிழைப்பு ஏற்றலும்
அவள்குறி மருண்டமை அவள்அவற்கு இயம்பலும்
அவன்மொழிக் கொடுமைசென்று அவள்அவட்கு இயம்பலும்
என்பிழைப்பு அன்றென்று இறைவி நோதலும்என
ஒன்று பன்னொன்றும் அல்லகுறிக் குரிய.

மேலே குறிக்கப்பெற்ற பன்னிரண்டும் அல்லகுறியின் விரிவாகும்.

### 1. இறைவிக்கு இகுளை இறைவரவு உணர்த்தல்

பாங்கி தலைவிக்குத் தலைவனின் வருகையை உணர்த்துதல்.

**புன்னை மென்காய்ப் போகுசினை இரிய**
**வாடுவளி தூக்கிய அசைவிற் கொல்லா**
**தெண்ணீர்ப் பொய்கையில் வீழ்ந்தன**
**எண்ணினை உரைமே உணர்குவல் யானே**

புன்னை மரத்தின் மெல்லிய காய்கள் கிளையினின்று நீங்கி அசைவற்ற பொய்கையில் வீழ்ந்து ஒலி எழுப்புகிறது. இது பற்றிய உன் கருத்துயாது தலைவியே!

### 2. தான்குறி மருண்டமை தலைவி பாங்கிக்கு உணர்த்தல்

வேறொரு வகையில் நிகழ்ந்ததைத் தலைவன் குறியாகக் கருதி மயங்கியதைத் தலைவி பாங்கிக்குக் கூறுதல்.

**அணிகடல் தண்சேர்ப்பன் தேர்ப்பரிமாப் பூண்ட**
**மணிஅரவம் என்று எழுந்து போந்தேன் - கனிவிரும்பும்**
**புள்ளரவம் கேட்டுப் பெயர்ந்தேன் - ஒளியிழாய்!**
**உள்ளுருகு நெஞ்சினேனாய்**

(ஐந்.ஐம்.50)

பாங்கியே! தலைவன் வரும் தேரில் குதிரையின் கழுத்தில் கட்டப்பட்ட மணியொலி என்று எழுந்து வந்தேன். ஆனால் அவ்வொலி நம் சோலையில் பழம் தின்னும் பறவைகளின் ஒலிகள் என்பதை அறிந்து வருந்தினேன்.

# 15. வரைவு கடாதல்

தலைவன் விரைவில் தலைவியை மணந்து கொள்ள வேண்டும் எனப் பாங்கி தலைவனிடம் கூறுவது **வரைவு கடாதல்** எனப்படும்.

**வரைவு கடாதலின் வகை**

165. **பொய்த்தல் மறுத்தல் கழறல் மெய்த்தல்என்று**
**ஒருநால் வகைத்தே வரைவு கடாதல்.**

பொய்த்தல், மறுத்தல், கழறல், மெய்த்தல் என்னும் நான்கும் வரைவு கடாதல் வகைகளாகும்.

1. **பொய்த்தல் :** விரைந்து தலைவியை மணந்து கொள்ள வேண்டும் என்பதற்காகப் பாங்கி தலைவனிடம் பொய் கூறுதல்.
2. **மறுத்தல் :** தலைவன் களவை நீட்டித்துத் தலைவியைச் சந்திக்க வர நினைப்பதைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பாங்கி மறுத்தல்.
3. **கழறல் :** தலைவனைக் கடிந்து பேசி விரைவில் தலைவியை மணந்து கொள்ளப் பாங்கி வற்புறுத்தல்.
4. **மெய்த்தல் :** தலைவனிடம் பாங்கி சில உண்மையான செய்திகளைக் கூறுதல்.

**வரைவு கடாதல் விரி**

166.
(49)

**வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பலும்**
**அலர் அறிவுறுத்தலும் தாய்அறி வுணர்த்தலும்**
**வெறி அச்சுறுத்தலும் பிறர்வரைவு உணர்த்தலும்**
**வரைவெதிர் உணர்த்தலும் வரையும்நாள் உணர்த்தலும்**
**அறிவு அறிவுறுத்தலும் குறி பெயர்த்திடுதலும்**
**பகல் வருவானை இரவுவருக என்றலும்**
**இரவு வருவானைப் பகல்வருக என்றலும்**
**பகலினும் இரவினும் பயின்றுவருக என்றலும்**
**பகலினும் இரவினும் அகல்இவண் என்றலும்**
**உரவோன் நாடும் ஊரும் குலனும்**
**மரபும் புகழும் வாய்மையும் கூறலும்**
**ஆறு பார்த்துற்ற அச்சம் கூறலும்**
**ஆற்றாத் தன்மை ஆற்றக் கூறலும்**
**காவல்மிக உரைத்தலும் காமம்மிக உரைத்தலும்**
**கனவுநலிவு உரைத்தலும் கவின்அழிவு உரைத்தலும்**
**எனமுறை நாடி இயம்பிய இருபதும்**
**வரைவு கடாதல் விரியெனப் படுமே.**

| வரைவு கடாதல் | |
|---|---|
| வகை 165 | விரி 166 |
| 1. பொய்த்தல் | 1. வினவிய செவிலிக்கு மறைத்தமை தலைவர்க்குத் தோழி விளம்பல்<br>2. அலர் அறிவுறுத்தல்<br>3. தாய் அறிவுறுத்தல்<br>4. வெறி அறிவுறுத்தல்<br>5. பிறர் வரைவு உணர்த்தல் |
| 2. மறுத்தல் | 9. குறி பெயர்த்திடுதல்<br>10. பகல் வருவானை இரவு வருக எனல்<br>11. இரவு வருவனைப் பகல் வருக எனல்<br>12. பகலினும் இரவினும் பயின்று வருக எனல்<br>13. பகலிலும் இரவினும் அகல் இவண் எனல் |
| 3. கழறல் | 14. உரவோன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல் |
| 4. மெய்த்தல் | 6. வரைவு எதிர்வு உணர்த்தல்<br>7. வரையும் நாள் உணர்த்தல்<br>8. தலைமகள் அறிவு தலைமகற்கு அறிவுறுத்தல்<br>15. ஆறுபார்த்து உற்ற அச்சம் கூறல்<br>16. ஆற்றாத்தன்மை ஆற்றக் கூறல்<br>17. காவல்மிக உரைத்தல்<br>18. காமம் மிக உரைத்தல்<br>19. கனவு நலிவு உரைத்தல்<br>20. கவின் அழிவு உரைத்தல் |

## 16. ஒருவழித் தணத்தல்

தலைவன் தலைவியின் களவொழுக்கம் அலராக வெளிப்பட பாங்கி தலைவனிடம் விரைந்து மணம் (வரைவு) முடிக்க வேண் அப்போது தலைவன் ஒருமுறை தன் ஊருக்குப் போய் விட்டுவரு கூறுவதே **ஒருவழித் தணத்தல்** எனப்படும்.

**ஒருவழித் தணத்தலின் வகை**

167. **செலவு அறிவுறுத்தல் செலவு உடன்படாமை**
**செலவு உடன்படுத்தல் செலவு உடன்படுதல்**
**சென்றுழிக் கலங்கல் தேற்றி ஆற்றுவித்தல்**
**வந்துழி நொந்துரை என்றுஎழு வகைத்தே**
**ஒன்றக் கூறிய ஒருவழித் தணத்தல்.**

மேலே குறிக்கப்பட்ட ஏழும் ஒருவழித் தணத்தலின் வகை ஆகும்.

1. **செலவு அறிவுறுத்தல் :** தலைவன் தான் ஒருவழித் தணத்த பாங்கிக்குக் கூற, அவள் அதனைத் தலைவிக்குத் தெரிவித்தல்.
2. **செலவு உடன்படாமை :** பாங்கியும் தலைவியும் தலைவன் பி செல்வதை ஏற்றுக் கொள்ள மறுத்தல்.
3. **செலவு உடன்படுத்தல் :** தலைவன் தோழியிடம் தான் பிரிந்து செ வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கூறி ஏற்கச் செய்தல்.
4. **செலவு உடன்படுதல் :** தலைவன் செலவினைப் பாங்கி ஏற் கொள்ளுதல்.
5. **சென்றுழிக் கலங்கல் :** தலைவன் ஒருவழித் தணத்தலில் பிரிந்த பி தலைவி கலங்குதல்.
6. **தேற்றி ஆற்றுவித்தல் :** தலைவியைப் பாங்கி தேற்றித் தெளிவுறுத்
7. **வந்துழி நொந்துரை :** தலைவன் சென்று மீண்டு வந்த பின்னர்ப் பா தாங்கள் பட்ட மன வருத்தத்தினைக் கூறுதல்; அதற்குத் தலைவனு வருத்தப்பட்டுக் கூறுதல்.

**ஒருவழித் தணத்தலின் விரி**

168. தன்பதிக்கு அகற்சி தலைவன் சாற்றலும்
மென்சொல் பாங்கி விலக்கலும் தலைவன்
நீங்கல் வேண்டலும் பாங்கி விடுத்தலும்
தலைவிக்கு அவன்செலவு உணர்த்தலும் தலைவி
நெஞ்சொடு புலத்தலும் சென்றோன் நீடலில்

காமம் மிக்க கழிபடர் கிளவியும்
கோல்தொடிப் பாங்கி ஆற்றுவித்தலும் அவன்
வந்தமை உணர்த்தலும் வந்தோன் தன்னோடு
நொந்து வினாதலும் வெந்திறல் வேலோன்
பாங்கியொடு நொந்து வினாதலும் பாங்கி
இறைவியை ஆற்றுவித் திருந்த அருமை
கூறலும் என்னும் ஆறிரு கிளவியும்
ஒருவழித் தணத்தலின் விரியெனப் படுமே.

மேலே குறிக்கப்பட்ட பன்னிரண்டும் ஒருவழித் தணத்தலின் விரியாகும்.

**1. தன்பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல்**

தான் தன் ஊருக்குச் செல்லும் பிரிவைத் தலைவன் பாங்கியிடம் கூறுதல்.

அலை தாக்குதலில் அசைந்து மணம் பரப்பும் தாழம்பூக்கள் நிறைந்த என் ஊருக்குச் சென்று திரும்பி வந்து தலைவியை மணம் செய்து கொள்வேன். தலைவியைத் தேற்றிக் காப்பாயாக. **நிரைகேச வஞ்சி அஞ்சேல் என்று தேற்றுதல் நின்கடனே** (தஞ்.கோ.*248*)

**2. பாங்கி தலைமகனைச் செலவு விலக்கல்**

தலைவியைப் பிரிய வேண்டாம் எனப் பாங்கி தலைவனிடம் கூறுதல்.

மணிகளை அருவிகள் உருட்டிக் கொண்டு வரும் மலைநாட்டுத் தலைவனே! தலைவியைப் பிரியாது இருப்பாயாக. நீ செல்லின் விரைந்து வருவாய் அல்லை. வாடையோ மிகவும் கடுமையாக இருக்கின்றது.

**வருவை அல்லை வாடை நனிகொடிதே!**
**அருவரை மருங்கின் ஆய்மணி வரன்றி**
**ஒல்லென இழிதரும் அருவி நின்**
**கல்லுடை நாட்டுச் செல்லல் தெய்யோ!** (ஐங்.233)

**3. தலைவன் நீங்கல் வேண்டல்**

தலைவன் தன் ஊருக்குச் சென்று வரவேண்டிய நிலையைப் பாங்கியிடம் கூறுதல்.

**குழலி சென்றே வரல் வேண்டும் எம் ஊரகத்தே** (தஞ்.கோ.250)

**4. தலைமகனைப் பாங்கி விடுத்தல்**

தலைமகளைப் பிரிந்து தலைவன் சென்று வரப் பாங்கி ஒப்புக் கொள்ளுதல்.

ஐவாய் அரவு உற்றதன்ன இன்னா இடர் ஆற்றி என்போல
எவ்வாறு இருந்தனிர் எல்வளையீர்

(தஞ்.கோ...)

**12. பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்த அருமை தலைமக... சொல்லல்**

தலைவன் பிரிந்த நிலையில் தலைவியைத் தான் ஆற்றுப்... வைத்திருந்த நிலையைப் பாங்கி தலைவனிடம் கூறல்.

தலைவனே; அயலாரைப் பிரிவதைப் போலத் தலைவியின் அ... கெடும்படி செய்து பிரிந்து விட்டாய். எம்கண்கள் எப்போ... கண்ணீரைப் பொழிந்த வண்ணம் இருந்தன.

போதார் கூந்தல் இயலணி அழுங்க
ஏதிலாட்டியை நீ பிரிந்ததற்கே
அழல் அவிர் மணிப்பூண் நனையைப்
பெயலானா என் கண்ணே தெய்யோ!

(ஐங்.2...)

| ஒருவழித் தணத்தல் | |
|---|---|
| வகை-167 | விரி-168 |
| 1. செலவு அறிவுறுத்தல் | தன் பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல் (1)<br>பாங்கி தலைவிக்கு அவன் செலவு உணர்த்... (5) |
| 2. செலவு உடன்படாமை | பாங்கி தலைமகனைச் செலவு விலக்கல் (2) |
| 3. செலவு உடன்படுத்தல் | தலைவன் நீங்கல் வேண்டடல் (3) |
| 4. செலவு உடன்படுதல் | தலைமகனைப் பாங்கி விடுத்தல் (4) |
| 5. சென்றுழிக் கலங்கல் | தலைவி நெஞ்சொடு புலத்தல் (6)<br>சென்றோன் நீடலில் காமம் மிக்க கழி படர்கிளவி (7) |
| 6. தேற்றி ஆற்றுவித்தல் | தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல் (8)<br>பாங்கி தலைமகட்குத் தலைவன் வந்தமை உணர்த்தல் (9) |
| 7. வந்துழி நொந்தல் வினாதல் | வந்தோன் தன்னொடு பாங்கி நொந்து<br>தலைவன் பாங்கியொடு நொந்து வினாதல் (10)<br>பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்த அருமைகூறல் (11) (12) |

# 17. வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிவு

தலைவியுடன் களவியற் பயிலும் தலைவன் அவளை மணத்தற்கு வேண்டும் பரிசுப் பொருள் கொடுக்க வேண்டிப் பொருள் ஈட்டி வரத் தலைவியை விட்டு நீங்கி இருதிங்கள் எல்லைக்குள் நாடு இடையிட்டும் காடு இடையிட்டும் செல்லும் பிரிவு. தன்முன்னோர் ஈட்டிய செல்வம் மிகுதியும் உண்டேனும் தான் முயன்று தேடிய பொருளையே பரிசப் பொருளாக வழங்குதல் வேண்டும் என்ற ஊக்கத்தால் தலைவன் களவொழுக்கத்திடையே இப்பிரிவை மேற்கொள்வான். (அக. விள. உரை. 41)

களவினுள் தவிர்ச்சி வரைவின் ஈட்டம்
திங்கள் இரண்டின் அகமென மொழிப

(இறை.கள.32)

## வரைவிடைவைத்துப் பொருள் வயின் பிரிதலின் வகை

169. பிரிவு அறிவுறுத்தல் பிரிவு உடன் படாமை
பிரிவு உடன்படுத்தல் பிரிவு உடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சி என்று
ஒருமையில் கூறிய ஒன்பது வகைத்தே
வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிவே.

மேலே குறிக்கப்பட்ட ஒன்பதும் வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிதலின் வகையாகும்.

**1. பிரிவு அறிவுறுத்தல் :** தான் வரைவிடை வைத்துப் பொருள் காரணமாகப் பிரிந்து போவதைத் தலைவிக்குத் தெரிவிக்குமாறு தலைவன் பாங்கியிடம் கூறுதல்.

**2. பிரிவு உடன்படாமை :** தலைவன் பிரிந்து செல்வதற்குப் பாங்கி உடன் படாது மறுத்தல்.

**3. பிரிவு உடன் படுத்தல் :** தலைவன் பாங்கியைப் பிரிவுக்கு உடன்படச் செய்தல்.

**4. பிரிவு உடன்படுதல் :** தலைவன் பிரிவுக்குப் பாங்கி உடன்படுதல்.

**5. பிரிவுழிக் கலங்கல் :** தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிந்ததை அறிந்து தலைவி மனங் கலங்கி வருந்துதல்.

**6. வன்புறை :** பாங்கி தோழிக்கு வற்புறுத்திக் கூறுதல்.

**7. வன்பொறை :** தலைவன் பிரிவினால் நேர்ந்த பொறுத்தற்கரிய துயரத்தை மன வன்மையால் [illegible] பொறுத்துக் கொள்ளுதல்.

கூறுதல்.

**9. வந்துழி மகிழ்ச்சி :** தலைவன் மீண்டு வந்தபோது தலைவி மகிழ்ச்சி அடைதல்.

(53)

## வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிதலின் விரி — 21

170. என்பொருட் பிரிவு உணர்த்து ஏந்திழைக்கு என்றலும்
நின்பொருள் பிரிவுஉரை நீஅவட்கு என்றலும்
நீடேன் என்றுஅவன் நீங்கலும் பாங்கி
ஓரிடக் கண்ணிக்கு அவன்செலவு உணர்த்தலும்
பூங்குழை இரங்கலும் பாங்கி கொடுஞ்சொல்
சொல்லலும் தலைவி கொடுஞ்சொல் சொல்லலும்
வருகுவர் மீண்டுஎனப் பாங்கி வலித்தலும்
பருவம் கண்டு பெருமகள் புலம்பலும்
இகுளைவம்பு என்றலும் இறைமகள் மறுத்தலும்
அவர்தூதாகி வந்து அடைந்தது இப்பொழுது எனத்
துணைவி சாற்றலும் பிணைவழி ஆற்றலும்
அவன் அவண் புலம்பலும் அவன்வருங் காலைப்
பாகன் தன்னொடும் மேகம் தன்னொடும்
சோகம் கொண்டவன் சொல்லலும் பாங்கி
வலம்புரி கேட்டுஅவன் வரவு அறிவுறுத்தலும்
வலம்புரிக் கிழத்தி வாழ்த்தலும் வந்துழி
நினைத்தமை வினாதலும் நினைந்தமை செப்பலும்
அனைத்தகை அவளை ஆற்றுவித்து இருந்தமை
பாங்கி கூறலும் எனவாங்கு எழு மூன்றும்
வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிவின்
விரியென விளம்பினர் தெரிமொழிப் புலவர்.

மேலே குறிக்கப்பட்ட இருபத்தொன்றும் வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிதலின் விரியாகும்.

**1. என் பொருட்பிரிவு உணர்த்து ஏந்திழைக்கு என்றல்**

தான் பொருள் வயின் பிரிந்து செல்வதைத் தலைவன் பாங்கியிடம் தலைவிக்கு உணர்த்தச் சொல்லுதல்.

நூல்போன்ற இடையை உடைய தலைவிக்குப் பரிசு பொருள் கொடுக்க வேண்டி பிரிகின்றேன். நீர் கொண்டு வரும் மேகம்போல் விரைந்து வருவேன். **உமைபோல் அரிநெடுங் கண்மயிலே! சென்று உணர்த்திதுவே.** (தஞ்.கே.260)

**18. வலம்புரி கிழத்தி வாழ்த்தல்**

தலைவி சங்கொலியைக் கேட்டு வாழ்த்துதல்.

வலம்புரிச் சங்கே! திருமகளும் விரும்பும் என் தலைவன் உன்னைத் தன்கையில் ஏந்தியுள்ளார். அவர் போன்ற நிறமுடைய நின்னைத் தெய்வமாகக் கருகிறேன்.

**புரிவளை வான் கோடே! புத்தேளொடு ஒத்தி**
**திரு அமர் மார்பனும் ஏந்தினான் தம்முன்**
**உருவம் புரையும் நின் கேழ்**

**19. தலைமகன் வந்துழிப் பாங்கி நினைத்தமை வினாதல்**

திரும்பி வந்த தலைவனிடம் பிரிவுக் காலத்தில் தலைவியை நினைத்தது உண்டோ எனப் பாங்கி வினவுதல்.

பொருள் தேடப் பிரிந்த காலத்தில் நீ தலைவியை நினைத்துப் பார்த்ததுண்டோ? **வேள் அனையீர்! நினைந்தும் அறிதிர் கொல்லோ** (தஞ்.கோ.278)

**20. தலைமகன் நினைத்தமை செப்பல்**

தலைவியை எப்போதும் மறக்காமல் நினைத்திருந்ததைத் தலைவன் பாங்கியிடம் கூறுதல்.

காடுமலைகளைக் கடந்து சென்றாலும் ஒருகாலும் யான் தலைவியை மறந்தறியேன்.

**கானொடு குன்றம் கடந்து சென்றேன் ஒருகாலும் மைதோய்**
**மானொடும் கண்ணி மறந்தரியேன்** **(தஞ்.கோ.279)**

**21. தலைமகளை ஆற்றுவித்திருந்த அருமை பாங்கி கூறல்**

தலைவியைத்தான் ஆற்றுவித்த அருமையைப் பாங்கி தலைவனிடம் கூறுதல்.

நீ தலைவியை விட்டுப் பிரிந்தாலும் அஞ்சாதே என்று தினமும் கூறி ஆற்றுவித்தேன். **அயராமல் அஞ்சல் என்று ஆற்றுவித்திருந்தேன்** (தஞ்.கோ.280)

| **வரைவிடை வைத்துப் பொருள் வயின்பிரிவு** | |
|---|---|
| **வகை-169** | **விரி-170** |
| 1. பிரிவு அறிவுறுத்தல் | என் பொருட்பிரிவு உணர்த்து ஏந்திழைக்கு என்றல் (1) |
| 2. பிரிவு உடன்படாமை | பாங்கி நின் பொருட்பிரிவு உரை நீ அவட்கு என்றல் (2) |
| 3. பிரிவு உடன்படுத்தல் | நீடேன் என்று அவன் நீங்குதல் (3) |

| | |
|---|---|
| 4. பிரிவு உடன்படுதல் | பாங்கி தலைமகட்குத் தலைமகன் செலவு உணர்த்தல் (4) |
| 5. பிரிவுழிக் கலங்கல் | தலைமகள் இரங்கல் (5)<br>தலைவி கொடுஞ்சொல் சொல்லல் (7)<br>பருவம் கண்டு பெருமகள் புலம்பல் (9)<br>இறைமகள் மறுத்தல் (11)<br>அவன் அவண் புலம்பல் (14) |
| 6. வன்புறை | பாங்கி கடுஞ்சொல் சொல்லல் (6)<br>வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல் (8)<br>இருளை வம்பு என்றல் (10)<br>அவர் தூதாகி வந்தடைந்தது இப்பொழுது எனத் துணைவி சாற்றல் (12) |
| 7. வன்பொறை | தலைமகள் ஆற்றல் (13) |
| 8. வருவழிக் கலங்கல் | மீண்டு வருகின்ற காலத்துத் தலைமகன் பாங்கனொடு சொல்லல் (15)<br>மேகத்தோடு சொல்லல் (16) |
| 9. வந்துழி மகழ்ச்சி | பாங்கி வலம்புரி கேட்டு அவன் வரவு அறிவுறுத்தல் (17)<br>வலம்புரி கிழத்தி வாழ்த்தல் (18)<br>தலைமகன் வந்துழிப் பாங்கி நினைத்தமை வினாதல் (19)<br>தலைமகன் நினைத்தமை வினாதல் (20)<br>தலைமகளை ஆற்றுவித்திருந்த அருமை பாங்கி கூறல் (21) |

(54)

மேற்குறிப்பிட்டவாறு களவியலில் தலைவன், தலைவி சந்தித்துக் களவொழுக்கம் நிகழ்த்துவது தொடர்பான கருத்துகள் தொகுத்து விளக்கப்பட்டுள்ளன.